4th May 1962]

SRI M. KALYANASUNDARAM : இந்தச் சபை அங்கத்தினர் கொண்டுவந்த காரணத்திற்காக இதை சீக்கிரத்தில் பரிசீலனை செய்யாமல் இருக்காமல் பொதுவாக நியாயமான அடிப்படையில் இதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு கூடிய சீக்கிரம் வருவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சபை அங்கத்தினர் கொண்டு வந்த காரணத்தினுல் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்பது இல்லை. அதற்காக அதை புறக்கணிக்க வேண்டும் என்பது அல்ல. மற்றும் அவருடைய கட்சியைச் சேர்ந்தவர் கொண்டு வருவதாக இருந்தாலும் அதற்கு என்று விசேஷ கவனம் செலுத்தாமல் இருக்க மாட்டார்கள். அதற்காகவும் அதை புறக்கணிக்க மாட்டார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI J. MATHA GOWDER : ஸார், சாதாரணமாக கூலி வேலை செய்யக்கூடியவர்கள் மாதம் 90 ரூபாய் சம்பளம் வாங்கி அத்துடன் வருஷத்திற்கு 200 அல்லது 300 ரூபாய் போனஸ் வாங்கினுல் அந்த போனஸையும் சம்பளத்துடன் சேர்த்து அதையும் வருமானமாகக் கருதி அந்த அளவில் வருடம் ஒன்றுக்கு 1,200 ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது என்று கணக்கிட்டு சம்பளச் சலுகை கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே போனஸை வருமானமாகக் கருதாமல் சம்பளச் சலுகைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய போனசும் வருமானம் என்றுதான் கருதப்படுகிறது. அதன் காரணத்தால்தான் சம்பளச்சலுகை கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை வருமானம் என்று கருதாமல் இருக்க முடியாது. அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் வருமானம் கணக்கிடப்படுகிறது.

Clay washing factory (The Nilgiris)

*22 Q.—SRI T. KARCHA GOWDER : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா கூடலூர் தாலூக்காவில் களிமண் சுத்தி செய்து பீங்கான் செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்க உத்தேசம் உண்டா?

(இ) ஆம் என்ருல், எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) A scheme for the establishment of only a clay washing plant in the Nilgiris is included in the Third Five-Year Plan.

(இ) The starting of the unit depends on the availability of adequate china clay for the purpose. A survey is being conducted regarding the availability of clay. The question of sanctioning the scheme will be taken up after receipt of the report on the above survey.

[4th May 1962

Sir, I want to add that since this answer was framed, the report has been received.

Sri J. MATHA GOWDER: ஸார், சென்ற ஆண்டு களிமண் சுத்திகரிப்புக்கு என்று சென்ற ஆண்டு அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு என்று 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அப்படி ஒதுக்கியிருந்தும் அந்தத் தொழிற்சாலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதற்காகத்தான் நான் இரண்டாவது கேள்வியையும் கேட்டிருக்கிறேன். ஆகவே அந்தத் தொழிற்சாலை எங்கே எப்பொழுது ஆரம்பிக்கப்படும், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றிய விவரங்கள் சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN: கிடைத்த அறிக்கை கனம் அங்கத்தினருக்கு சாதகமாக இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இப்பொழுது வந்திருக்கிற அறிக்கையின்படி போதுமான அளவுக்கு பீங்கான் களிமண் கிடைக்கவில்லை என்று அறிக்கையில் இருக்கிறது. ஆகவே அதில் மேற்கொண்டு ஈடுபடுவது கஷ்டம்.

*23 Q.—**Sri J. MATHA GOWDER**: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவில் சேராம்பாடி என்ற இடத்தில் களிமண் சுத்திகரிப்பு செய்வதற்காக 1961-62-ம் ஆண்டுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(இ) வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா?

(உ) இல்லையென்றால், காரணமென்ன?

The Hon. Sri R. VENKATARAMAN: (அ) 'Nil', Sir.

(இ) & (உ) Do not arise.

Municipal Engineer (Trichy)

*24 Q.—**Sri M. S. MANI**: கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 3-3-1962-ல் திருச்சி நகராட்சி மன்றம், நகராட்சிப் பொறியாளரின் பணியை நீடிப்பது பற்றி, நிறைவேற்றிய தீர்மானம் அரசாங்கத்திற்குக் கிடைத்ததா?

(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

The Hon. Sri S. M. A. MAJID: (அ) Yes, Sir.

(இ) The request contained in the resolution was negatived by Government on administrative grounds.